ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஈ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2003-2004 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

6. அறிவிப்பு

குழுக்களுக்குத் தேர்தல்-கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத்தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

வேட்புத்தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் புதன்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,